

# பண்டார் துன் ரசாக்கில் 4 சட்டவிரோதக்
# கடைகள் தரைமட்டம்
## மாநகர் மன்றம் நடவடிக்கை

கோலாலம்பூர், அக். 12-
பண்டார் துன் ரசாக்கில் கார் கழுவும் கடை, சட்டவிரோத அங்காடிக் கடை உள்ளிட்ட 4 கடைகளை கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று தரைமட்டமாக்கியது.

கோலாலம்பூர், மாநகர் மன்றத்தின் பண்டார் துன் ரசாக் அமலாக்கப் பிரிவும் பொறியியல் மின்சாரத்துறையும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக டிபிகேஎல் வெளியிட்ட அறிக்கை கூறியது.

ஜாலான் 2/154 தாமான் புக்கிட் அங்கெரிக், ஜாலான் 40/154 தாமான் டாலியா ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த 4 சட்டவிரோதக் கடைகள் அகற்றப்பட்டன.

அனுமதியின்றி இந்தக் கடைகள் அங்கு அமைக்கப்பட்டிருந்ததால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டிருந்தது தெரிய வந்தது. இதனால் அங்கு சுற்றுச்சூழல் பாதிப்பும் பொதுப் பாதுகாப்புப் பிரச்சினையும் ஏற்பட்டது என்று அந்த அறிக்கை கூறியது. மாநகர் கோலாலம்பூர் நேர்த்தியானதாகவும் வசதிமிக்கதாகவும் அனைவருக்கும் பாதுகாப்பானதாகவும் இருப்பதை உறுதி செய்யும் டிபிகேஎல் திட்டத்திற்கு ஏற்ப இந்த நடவடிக்கை அமைந்தது.